## கூட்டுறவு மிகை நிதியம் 2014

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுறவு மிகை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 02

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,005,124 தொகையான நிலையான சொத்துக்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 298,171,210 தொகையான நிலையான வைப்புக்கள் பிணை கடன் தீர்வுசெய்தல், தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களின் முதலீடு ரூபா 200,000,000 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 151,627,662 காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படாதிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 6,861,658 ஆன திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஐந்தொகையில் கற்பனைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 189,001 தொகையான கணனி மென்பொருட்களின் பயன்படு ஆயுட்காலம் எதிர்வு கூறப்பட்டு வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 564,202,779 ஆக இருந்த போதிலும், பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 655,433,222 கூட்டுத்தொகையாக இருந்தமையால் ரூபா 91,230,443 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.4 தொங்கல் கணக்கு**

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,475,735 தொகையான தொங்கல் கணக்கின் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 542,377,482 கூட்டுத்தொகையான கூட்டுறவுச் சங்கக் கடன் மற்றும் செயற்திட்டக் கடன் மீதிகள் தொடர்பான மீதி உறுதிப்படுத்தல்கள் கடிதங்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 1,716,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகளைத் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,020,235 கூட்டுத்தொகையான 05 பொறுப்புக் கணக்குகளின் மீதி வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அம்மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை நிதிப்பிரமாணம் 188(2) | 09 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 73,804 கூட்டுத்தொகையான தீர்வையாகாத வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்த 02 மாதங்களிற்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையுடன் திரட்டிய நிதியத்தின் மாற்றங்களைக் காண்பிக்கும் கூற்றொன்று அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 40,735,573 மிகையொன்றானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 27,722,806 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,012,767 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 60,910,456 ஆல் குறைவடைந்திருந்த போதிலும், ஏனைய செலவினங்கள் ரூபா 74,001,020 ஆல் குறைவடைந்திருந்தமை காரணமாக இம்மிகை ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 இல் நிதி மிகை ரூபா 67,946,692 ஆக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 13,012,767 ஆல் அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் நிதியத்தின் பங்களிப்பு ரூபா 407,830 ஆக இருந்ததுடன், அது தொடர்ச்சியாக அதிகரித்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 996,036 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 சனவரி 10 ஆந் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு சட்ட விதிகளில் 44(iii) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து பணம் செலவிடக்கூடிய முறை கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ஆரம்ப சங்கமொன்றின் பங்குகளை விலைக்கு கொள்வனவு செய்தல், பதிவாளர் நிர்ணயிக்கின்ற ஏனைய முறையிலோ அல்லது அவ்வாறான சங்கமொன்றுக்கு உதவியளித்தல்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு நன்கொடை வழங்குதல்.

(இ) கலைப்பாளருக்கு எதிராக உள்ள சிவில் வழக்கொன்றின் போது அவரின் விடுவிப்பிற்கு செயற்படுதலும் அவருக்கு நன்கொடை வழங்குதலும்.

(ஈ) பதிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு நன்கொடை வழங்கும் செயற்பாடுகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குதல்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு 35 கூட்டுறவு சங்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 551,430,773 தொகையான சுழற்சிக் கடன் மீதியில் மீளாய்வாண்டின் போது கூட்டுறவு சங்கங்களிலிருந்து ரூபா 110,510,946 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த சுழற்சிக் கடன் மீதியின் 20 சதவீதமாக இருந்தது.

(ஆ) செயற்படாத கடன் பட்டோலையின் பிரகாரம் 72 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 95,426,361 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய கடன் பெறுமதி ரூபா 306,503 மாத்திரமாக இருந்தது. இச்செயற்படாத கடன் மீதிகள் 1989 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்தொகையாக அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுறவுச் சங்கத்தால் 2008 ஆம் ஆண்டின் போது அரச வங்கியென்றிடமிருந்து ரூபா 40,000,000 ஆன நாணயக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மிகை நிதியத்தின் ரூபா 50,000,000 கூட்டுத்தொகையான இரண்டு நிலையான வைப்புக்கள் பிணைப் பொறுப்பாக வழங்கப்பட்டிருந்தது. சங்கம் அக்கடன் தொகையைச் செலுத்துவதற்கு தவறியமையால் வங்கியால் அந்த இரண்டு வைப்புக்களிலிருந்து நிலுவைக் கடன்தொகையையும் வட்டிக்குமாக ரூபா 51,302,293 தொகையினை 2014 ஆம் ஆண்டின் போது ஈடுசெய்திருந்தது.

(ஈ) 2008 ஆம் ஆண்டில் மிகை நிதியத்தலிருந்து செயற்திட்டக் கடனாக கூட்டுவுச் சங்கமொன்றுக்கு வழங்கிய ரூபா 5,000,000 தொகை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிக்கவரட்டிய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய கடன்**

(i) நிக்கவரட்டிய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கு தேவையான நிதியை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது மிகை நிதியத்திலிருந்து ரூபா 4,000,000 கடன்தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், கடனுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி, கடன் தீர்க்கப்பட வேண்டிய காலம் மற்றும் வைக்கப்பட வேண்டிய பிணை தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சங்கமொன்றினால் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கிடைக்கும் வருமானத்திலிருந்தோ அல்லது சங்கத்தின் நிதியத்திற்கு பணம் கிடைக்கப் பெறும்முறை ஆகிய இரண்டில் முதலாவது கிடைக்கும் தொகையில் ஒரே தடவையில் செலுத்தி கடனை விடுவிக்க வேண்டுமென இணங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2,300,000 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஏ) தேசிய கூட்டுறவுப் அபிவிருத்தி நிறுவகத்தின் கேட்போர்கூட கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்காக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 20,000,000 மற்றும் ரூபா 25,000,000 ஆன கடன் தொகை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட கடனுக்கு முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து மேலும் ரூபா 25,000,000 அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதமும் ரூபா 21,000,000 இனை விட கூடுதலாக பேணப்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ் 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 09 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நாட்குறிப்பு பதிவுகளை தயாரித்தலும் அங்கீகரித்தலும் முறைப்படி மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) மிகை நிதியினை முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தாமை |
| | (ii) கடன் வழங்கும் போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமை மற்றும் கடனை அறவிடுவதில் பலவீனம் மற்றும் வழங்கப்பட்ட கடன் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக பேணப்படாமை |